25th March 1963]

திரு. இராம. அரங்கண்ணல் : இதற்காக ரூ. 7 லட்சத்தில் திட்டம் போட்டு உதவி கோரி டெல்லி கலாசார மந்திரியாலயத்திற்கு இந்த அரசாங்கம் எழுதியதாகவும், ஒரு ஆண்டு கழித்து அந்த மந்திரியாலயம் இது தங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல, கல்வி இலாகாவுக்கு எழுத வேண்டும் என்று நமது மாநில அரசாங்கத்திற்கு தாக்கீது அனுப்பியதாகவும், அதற்குள் போட்ட திட்டம் ரூ. 10 லட்சத்திற்கு உயர்ந்துவிட்டதாகவும், டெல்லியில் உள்ள கல்வி இலாகா அதை மறுத்து விட்ட காரணத்தினால் நம்முடைய மாநில அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தயங்கிக்கொண்டிருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி வேண்டும் என்பதுதான் எப்பொழுதுமே அரசாங்கத்தின் கருத்து. முன்பு இருந்த அரசாங்கம் அவ்வாறு மதிப்பீடு போட்டு, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருந்தது. இந்தப் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று இது தள்ளிப்போடப்பட்டது. மேலும் இதெல்லாம் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டு, இந்த மதிப்பீடு போடப்பட்டு, மேலும் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியை நாடி, அதைப் பெற்றபிறகு இதை எடுத்து நடத்தலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

Prisoners (Classification)

* 374 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) on what basis prisoners are classified in Jails; and

(*b*) whether there is any proposal to abolish such classification?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Prisoners are placed in 'A' or 'B' class in jails on the basis of their character, social status, mode of living and nature of the offence committed. Class 'C' consists of prisoners who are not classified in classes 'A' or 'B'.

(*b*) There is no such proposal.

திரு. எஸ். மாதவன் : இந்த விதிகளெல்லாம் வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்ட விதிகளா ? எந்த அடிப்படையிலே இந்த விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? பொருளாதார அடிப்படையில் இருந்தால் இதை ஜனநாயக நாட்டில் மாற்றி அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்தின் நிர்வாக அமைப்பே வெள்ளையர் காலத்தில் இருந்த அடிப்படையிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் நடந்துவருவதில் ஒன்றும் தவறு இல்லை. விதிகளும் வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்டவைதான். ஆனால், அவ்வப்பொழுது மாற்றப்பட்டு வருகிறது. அவர்கள் எந்த வாழ்க்கையில் உள்ளவர்களோ, எத்தகைய ஒரு நிலைக்கு, அந்தஸ்துக்கு பழக்கம் உள்ளவர்களோ, அதுதான் அடிப்படை. அதற்கும் குறைக்கக் கூடாது. அப்படிக் குறைத்தால் வேண்டுமென்றே அதிகமாக தண்டனை கொடுப்பதாகும். முன்பு நடந்த சிறைச்சாலை மான்ய விவாதத்தின்போது அரசாங்கத்திற்கு தண்டிக்கும் எண்ணம், பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் கூடாது என்று சொன்னார்கள். அதுதான் அரசாங்கத்தின் கருத்தும். ரெபர்மேடரியாக இருக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். அந்த அடிப்படையிலேதான் பாகுபாடுகள் இருக்கின்றன.

திரு. எஸ். மாதவன் : அமைச்சர் அவர்கள் அந்தஸ்து என்று குறிப்பிட்டார்கள். இதைத்தான் நான் கேட்கிறேன். வெள்ளையர் காலத்தில்

பொருளாதார அடிப்படையில் இந்த அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டது. ஜன நாயக நாட்டில் பொருளாதார அடிப்படையில் அந்த நிர்ணயத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரூ. 50 செலவிலும் வாழ்க்கை நடத்துகிறவர்களும் உண்டு. ரூ. 500 செலவிலும் வாழ்க்கை நடத்து கிறவர்களும் உண்டு. ரூ. 50 செலவில் வாழ்க்கை நடத்துபவர்கள் ரூ. 500 செலவில் சிறையிலே வைக்கப்பட்டால் நான் முன்பு கூறியது போல், சிறை சொர்க்க உலகம் ஆகிவிடும், இன்னொரு முறை சிறைக்குப் போக லாம் என்று தோன்றும். ரூ. 500 வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ஓரளவுக்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன. இல்லையென்றல் பழிக்குப் பழி வாங்குவது ஆகிவிடும். அது தான் அடிப்படை.

Pre-University Course

* 375 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of seats available in the Pre-University Course (i) in Government Colleges and (ii) other Colleges;

(*b*) whether there is any proposal to increase the number of seats in Government Colleges; and

(*c*) if so, to what extent?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) (i) 2,720.

(ii) 20,523.

(*b*) & (*c*) Government proposes to start a separate College for Girls in Kumbakonam from the next academic year and this may result in an increase in the number of seats. The exact extent to which there will be increase cannot be stated now.

(அ) (i) 2,720, (ii) 20,523.

(இ) and (உ) வருகிற கல்வியாண்டிலிருந்து கும்பகோணத் தில் பெண்களுக்காகத் தனியாக கல்லூரி ஒன்று அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதனல் அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் மொத்த இருக்கை அதிகரிக்கலாம். ஆனல் இந்த அதிகரிப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்று இப்போது கூற இயலாது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆண்டு தோறும் எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பில் தேறுகிறவர்கள் பல ஆயிரக் கணக்காக இருக்கிற காரணத் தினல் புகுமுக வகுப்பில் இருக்கிற இடங்களுக்கும், வருஷம் தோறும் பாஸ் செய்கிற மாணவர்களுக்கும் இருக்கிற வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் இருப்பது போல் இருக்கிற காரணத்தினல், இதைப்பற்றி ஒரு விரிவான திட்டம் ஏதாவது யோசிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இடத் தேவைக்குத் தக்கவாறு புதிய கல்லூரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இயன்ற அளவுக்கு இருக் கிற ஸ்தானங்களும் அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. ம. கமலநாதன் : கும்பகோணத்தில் ஒரு கல்லூரி ஆரம்பிப்பது போலவே, அமைச்சர் அவர்களுக்கு நன்றுகத் தெரியும், கிருஷ்ண கிரியிலும் ஆரம்பிப்பதாக இருந்தது. தேசீய நெருக்கடி காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், கட்டிட வசதி, மற்ற வசதிகள் செய்து கொடுத்தால், அதையும் கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் அவரிடம் சென்ற தூதுகோஷ்டியினரிடம் சொன்னதாகத் தெரிகிறது. அது எந்த நிலையில் இருக்கிறது ?